1990 ஆகஸ்ட் 21]

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புத லோடு வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. டி. கே. பழனிச்சாமி : நமது ஒப்பற்ற தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் ஜூன் மூன்றாம் தேதி வருகிறது. சினிமாத் துறையைப் புரட்சிகரமாக ஏற்படச் செய்த, பல நடிகர்களை உருவாக்கிய ஒப்பற்ற தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தை, குழந்தைகள் தினம், ஆசிரியர்கள் தினம் என்பதைப் போல் கொண்டாட இந்த அரசு முன்வர வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பதில் இல்லை)

கைத்தறி ரகங்களுக்குத் தள்ளுபடி

*8027 திரு. ஏ. கணேசமூர்த்தி :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறி ரகங்களுக்கு சில்லறை விற்பனைக்கு 20 சதவீதம் தள்ளுபடி வழங்குவது போல் மொத்த விற்பனைக்கும் 20 சதவீதம் தள்ளுபடி வழங்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப் படும் ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.
(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

கால்நடை மருந்தகம் துவக்குதல்.

*6546 திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், மேலூர் சட்டமன்றத் தொகுதி, திருவாதவூர் மற்றும் வெள்ளளூரில் ஒரு கால்நடை மருந்தகம் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : திருவாதவூர் மற்றும் வெள்ளலூரில் மதுரை தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கால்நடை செயற்கை முறை இனவிருத்தி கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 1989–90-ல் புதிய கால்நடை மருந்தகங்கள் துவங்குவதற்கான கருத்துரு பரிசீலிக்கப் பட்டது. ஆனால் உத்தேச இடங்களின் பட்டியலில் மதுரை மாவட்டம், மேலூர் ஊராட்சி ஒன்றியம் திருவாதவூர் மற்றும் வெள்ளலூர் இடம் பெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் 13 ஆண்டுக் காலம் 15 ஆண்டுக் காலம் பணிபுரிந்த ஆசிரியர்கள் 23 ஆம் தேதியி லிருந்து 31 ஆம் தேதி வரையில் உண்ணாவிரதம் இருப்பதாக குடும்பத்தோடு உண்ணாவிரதம் இருப்பதாக நோட்டீஸ், கொடுத்திருக்கிறார்கள் ; உண்ணாவிரதம் இருந்து கொண் டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை நியாயமானது. அகில உலக எழுத்தறிவு ஆண்டிலே—13 ஆண்டு காலம் பணிபுரிந்த ஆசிரியர்கள் அவர்கள் ; அவர்களுக்கு இனி வேலைவாய்ப்பே கிடைக்காது. ஏனென்றால் 40 வயது தாண்டிவிட்டது. அதனால் வேலையே கிடைக்காது. ஆனால் அமைச்சரவர்கள் நிதிநிலைமை காரணம் என்று முன்னாலேயும் சொல்லி இருக்கிறார்கள் ; இப்போதும் சொன்னார்கள். ஆனால் என்னுடைய கருத்து என்னவென்றால் அவ்வளவு பேருக்கும் உடனே கொடுக்க முடியவில்லை என்று சொன்னாலும் கூட— ஆயிரத்து சொச்சம் ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள் அந்த மாவட்டத்திலே—ஒரு தனி அதிகாரியை நியமனம் செய்து உண்மையிலேயே இந்த ஆசிரியர்கள் தேவைதானா, அங்கே மாணவர்கள் பயிலுகிறார்களா என்று பார்த்து, ஒரு